செப்டம்பர் 1-7

மனன வசனம்

**என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். அப் 20:24.**

ஆராய்ச்சிக்கு

*அப் 18:24-28; அப் 19; அப் 20:7-12, 15-27; 2கொரி 4:8-14: அப் 21:1-15.*

செப் 1 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பாடம் 10

# மூன்றாவது நற்செய்தி ஊழியப்பயணம்



அந்தியோகியாவிலிருந்துதான் பவுல் தன் நற்செய்தி ஊழியப்பயணங்களை ஆரம்பிப்பார். அதுபோல, அந்தியோகியாவிற்கு வந்து சிலகாலம் கழித்து, சட்டென்று அவர் தன் மூன்றாவது ஊழியப்பயணத்திற்குப் புறப்பட்டதாக லூக்கா குறிப்பிடுகிறார். அவர், 'கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து, சீஷரெல்லாரையும் திடப்படுத்தினார்.' அப் 18:23. 1500 மைல் அவர் பயணித்த சம்பவத்தை ஒரே வரியில் சொல்லிவிடுகிறார்.

எபேசுவில் அவர் செய்த ஊழியத்தை வலியுறுத்துவதே இதற்கு காரணம். பவுல் தன்னுடைய பயணங்களில் வேறு எந்தப் பட்டணத்திலும் இருந்ததைவிட எபேசுவில்தான் அதிக காலம் இருந்திருக்கிறார். நற்செய்தி ஊழிய ரீதியாகப் பார்த்தாலும், எபேசுவில் ஊழியம் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது; அவருடைய பிரசங்கமானது கிட்டதட்ட ஆசிய மாகாணம் முழுவதையுமே குலுங்கச் செய்தது. அப் 19:10,26. இந்தக் காலக்கட்டத்தில்தான் பவுலின் சகஊழியரான எப்பாப்பிராமூலமாக (கொலோ 4:12,13.) கொலோசே, எராப்போலி, லவோதிக்கேயா போன்ற பட்டணங்களில் சபைகள் நிறுவப் பட்டிருக்கவேண்டும். கொலோ 1:7, பிலே 23

பவுலின் கடைசிப் பயணமாக அப்போஸ்தலரில் பதிவுசெய்யப்பட்டுள்ளதும் இந்தப் பயணம்தான். ஒரு சுதந்திர மனிதனாக இந்தப் பயணத்தை மேற்கொண்டார். ரோமுக்கு பவுல் சென்ற ஒரு பயணத்தையும் லூக்கா குறிப்பிட்டுள்ளார். ஆனால் அங்கு ஒரு சிறைக் கைதியாக அவர் கொண்டு செல்லப்பட்டார்.

*2018, செப்டம்பர் 8 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

## எபேசு: பகுதி I

பவுல் எபேசுவுக்குச் சென்றுகொண்டிருக்கிறார்; அந்தச் சமயத்தில் அப்பொல்லோ என்கிற ஒரு யூத விசுவாசி எபேசு பட்டணத்திற்கு வருகிறார். அப் 18:24-28. அவர் திறமையாகப் பேசக்கூடியவர்; வேதவாக்கியங்களை நன்கு கற்றறிந்தவர். அவர் இயேசுவைப் பின்பற்றினதை லூக்கா தெளிவாகக் குறிப்பிடுகிறார். 'அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக் கொண்டு வந்தான்.' அப் 18:25. ஆனால் யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அப்பொல்லோ அறிந்திருந்தார். யோவான் ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெற்று, இயேசுவின் ஊழிய நாட்களில் அவரோடு நெருக்கமாக இருந்தார்; ஆனால், இயேசுவின் மரணம், பெந்தெகொஸ்தே நிகழ்வுகளுக்குமுன் அவர் அலெக்சாந்திரியாவுக்குச் சென்றிருக்கலாம்.

இதனால்தான் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவருக்கு அதிகமாகப் போதிக்க வேண்டியிருந்தது. இயேசுதான் இஸ்ரவேலின் மேசியா என்பதை அப்பொல்லோ அறிந்திருந்தார். அப் 18:28. ஆனால், இயேசுவின் ஊழியத்திற்கு பிறகு கிறிஸ்தவ மார்க்கத்தில் நிகழ்ந்த சம்பவங்களை அவருக்கு விவரிக்க வேண்டியிருந்தது. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அப்பொல்லோவுக்கு இன்னொரு உதவியும் செய்தார்கள்; எபேசுவிலிருந்த விசுவாசிகளுடன் சேர்ந்து, அகாயாவிலிருந்த சபைகளுக்கு அப்பொல்லோவைப் பரிந்துரைத்து ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினார்கள். அப் 18:27. அதனால்தான் கொரிந்துவில் அவர் வல்லமையாக ஊழியம் செய்யமுடிந்தது. 1கொரி 3:4-6; 4:6; 16:12.

**பவுல் எபேசுவைச் சென்றடைந்ததும் என்ன நிகழ்ந்தது? அப் 19:1–7.**

எபேசுவில் பவுல் சந்தித்த அந்தப் பன்னிருவரும்கூட அப்பொல்லோ இருந்த நிலையில்தான் காணப்பட்டார்கள். அப் 19:1இல் அவர்கள் 'சீஷர்கள்' என்று குறிப்பிடப்படுகிறார்கள்; மேலும் அப் 19:2இல் பவுல் கேட்கிற கேள்வியும்கூட அவர்கள் இயேசுவை விசுவாசித்ததைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. அப்பொல்லோவைப் போல இவர்களும் யோவான் ஸ்நானனின் சீடர்களாகயிருந்து, பிறகு இயேசுவைப் பின்பற்றியிருக்கிறார்கள்; ஆனால் பெந்தெகொஸ்தேயின் அனுபவத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆண்டவரோடு மேலும் ஆழமான உறவுவைப்பதற்கான ஒரு வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்திருந்தது.

'பவுல் எபேசுவுக்கு வந்ததும் பன்னிரு சகோதரரைச் சந்தித்தார்; அப்பொல்லோவைப் போல யோவான் ஸ்நானனின் சீடர்களாக இருந்து, கிறிஸ்துவின் ஊழியம்குறித்து ஓரளவுக்கு அறிந்திருந்தார்கள். அப்பொல்லோ அளவுக்குத் திறமை இல்லாவிட்டாலும், அவர்போலவே தாங்கள் அறிந்திருந்ததை தூர இடங்களில் பரப்புவதில் தீவிரத்தோடும் விசுவாசத்தோடும் காணப்பட்டார்கள்.' - *AA, p 282.*

புதிதாக அவர்கள் ஞானஸ்நானம் பெற்றதால், அவர்கள் வேறு கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவர்களோ, புதிதாக மனமாறியவர்களோ அல்ல. அவர்கள் பரிசுத்தாவியைப் பெற்று, அந்நிய பாஷையில் பேசினதும்கூட, அப்பொல்லோ போல தாங்கள் செல்கிற இடங்களில் எல்லாம் இயேசுவை அறிவிக்க முற்றிலும் வல்லமையால் நிரப்பப்பட்டதையே சுட்டிக்காட்டுகிறது.

## எபேசு: பகுதி 2

எபேசுவிலும் பவுல் தன் வழக்கத்தின்படியே முதலில் ஜெபாலயத்தில் தான் பிரசங்கித்தார். அங்கு எதிர்ப்பு கிளம்பியது; எனவே, அவரும் புது விசுவாசிகளும் திறன்னு என்பவருடைய பள்ளிக்கூடத்தில் கூடினார்கள். அங்கே தினமும் இரண்டு வருஷ காலமாக பவுல் பிரசங்கித்தார். அப் 19:8-10. பவுலின் ஊழியத்தால் அந்த மாகாணம் முழுவதும் நற்செய்தி பரவியது; அதை லூக்கா சுருக்கமாகச் சொல்கிறார். அப் 19:10,26.

மாயவித்தைகளும், மூடநம்பிக்கைகளும் நிறைந்த ஒரு பட்டணத்தில் தேவ வல்லமை மகிமையாக வெளிப்பட்ட ஒரு சில அற்புதங்களை அப் 19:11-20இல் லூக்கா குறிப்பிடுகிறார். பவுல்மூலம் தேவன் அற்புதங்களைச் செய்ததில் ஆச்சரியமில்லை; ஆனால், அவருடைய கைக்குட்டைகளையும் வஸ்திரங்களையும் தொட்டவர்கள் குணமானது சிலருக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அப் 19:12. ஆனால், இரத்தப்போக்கால் அவதிப்பட்ட ஸ்திரீயை இயேசு குணமாக்கின சம்பவத்தை யோசியுங்கள். லூக் 8:44. எபேசுவில் மூடநம்பிக்கைகள் நிறைந்திருந்ததாலேயே 'விசேஷித்த' அற்புதங்களை தேவன் அங்கு நடப்பித்திருக்கக்கூடும். அப் 19:11. மக்கள் எந்த அளவுக்கு புரிந்திருக்கிறார்களோ அந்த அளவிற்கு இறங்கிச்சென்று தேவன் உதவுகிறார் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

எபேசுவில் ஊழியம் வெற்றிகரமாக அமைந்தபின், எருசலேமுக்குச் செல்ல பவுல் தீர்மானிக்கிறார். அப் 19:21. அதற்கான காரணத்தை லூக்கா எழுதவில்லை; ஆனால், எருசலேம் சபையிலிருந்த தரித்திரர்களுக்காக தான் சேகரித்திருந்த தருமப்பணத்தைக் கொண்டுசெல்வதற்காகச் சென்றதாக பவுல்தாமே தன் நிருபங்களில் குறிப்பிடுகிறார். ரோமர் 15:25-27; 1கொரி 16:1-3. சபையின் முதல்சில வருடங்களில் பொருட்கள் குவிந்தன; ஆனால், கிலவுதியு ராயனின் நாட்களில் கொடிய பஞ்சம் உண்டாயிற்று; யூதவிசுவாசிகளும் தரித்திரத்திற்கு ஆளானார்கள். அதனால் உதவிகேட்டார்கள். அவர்களுக்கு உதவிசெய்வதால், தன் அப்போஸ்தலதுவத்தில் அவர்களுக்கு நம்பிக்கை பெலப்படுமென்றும், கலாச்சாரம்கடந்து சபையில் ஒற்றுமை நிலவுமென்றும் பவுல் நம்பினார். கலா 2:10. ஆனால், தனக்கு நேரிடவிருந்த அபாயங்களையும் அறிந்திருந்தார். அப் 20:22,23; ரோமர் 15:31.

**எபேசுவிலிருந்து பவுல் கிளம்பவிருந்த சமயத்தில் அவருக்கு எதிராக சிலர் கலகம் செய்கிறார்கள். அப் 19:23–41. அவர்களுடைய உண்மையான நோக்கம் என்ன?**

பவுலின் ஊழியத்தில் அங்கிருந்த விக்கிரகாராதனைக்காரர்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். தெமேத்திரியுவின் உண்மையான நோக்கம் பணம்தான்; ஆனால், அதை ஒரு மதப்பிரச்சனையாக மாற்றுகிறான். ஏனெனில், எபேசுவில் இருந்த ஆர்திமிஸ் அல்லது தியானாள் கோவிலானது பண்டைய உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

வருமானம் குறைந்துவிடுமோ என்று பயந்த திமேத்திரியு, தந்திரமாக 'பக்திவேஷம்' போடுகிறான். கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை போர்வையாக்கி, பக்திவேஷம் போடாதிருக்க வேண்டியது எவ்வளவு முக்கியமானது?

## செவ்வாய், செப்டம்பர் 4

# துரோவா

கலகம் ஓய்ந்தபிறகு, எபேசுவை விட்டுக் கிளம்ப பவுல் தீர்மானிக்கிறார். அப் 19:23-41. நேராக எருசலேமுக்குச் செல்லாமல், மக்கெதோனியா மற்றும் அகாயா வழியாகச் சுற்றிச்செல்கிறார். அப் 20:1-3. சில புறஜாதி சபைகளின் பிரதிநிதிகளும் அப்போது அவரோடு இருந்தார்கள். அப் 20:4.

**ஓய்வுநாளானது சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டதாக வாக்குவாதம்பண்ண சிலர் அப் 20:7–12 வசனங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். இது எவ்வாறு தவறான வாக்குவாதமாகும்?**

பவுல் துரோவாவில் தங்குகிறார்; 'வாரத்தின் முதல்நாளிலே' அங்குச் சபை கூடினார்கள். அப் 20:7. 'அப்பம் பிட்கும்படி' கூடினார்கள். அதாவது, திரு விருந்துக்காகக் கூடியிருக்கலாம். எருசலேம் சபை தொடங்கப்பட்ட நாள் முதல் திருவிருந்தோடு, ஐக்கிய விருந்தும் இருக்கும். அப் 2:42,46. துரோவாவில் ஐக்கிய விருந்து நடந்ததா, இல்லையா தெரியவில்லை. இரசம்பற்றியோ ஜெபம் பற்றியோ சொல்லாததால், திருவிருந்து நடக்கவில்லை என்று சொல்ல முடியாது.

பவுல் காலத்திலேயே புறஜாதி சபையார் சிலர் சனிக்கிழமைக்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமையை தொழுகையின் நாளாக அனுசரித்தார்கள் என்று நிரூ பிக்க சிலர் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்கள். ஆனால், சரியாக என்றைக்கு கூட்டம் நடந்தது, எதற்காக நடந்தது என்பதை ஆராயவேண்டியது அவசியம். விளக்குகள் வைக்கப்பட்டிருந்தன. அப் 20:8. நடுராத்திரியிலிருந்து அடுத்த நாள் விடியற்காலைமட்டும் பவுல் பிரசங்கித்தார். அப் 20:11. ஐத்திகு வுக்கு நித்திரை வந்தது. அப் 20:9. இவையெல்லாம் கூட்டம் இராத்திரியில் நடந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன.

ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தின நாள் இரவில் நடந்ததா, சனிக்கிழமை இரவு நடந்ததா என்பதுதான் கேள்வி. லூக்கா எந்த நேரமுறையை மனதில் வைத்து எழுதினாரெனத் தெரியவேண்டும். யூதர்கள் சூரிய அஸ்தமனத்திலிருந்து மறுநாள் சூரிய அஸ்தமனம் வரைக்கும் ஒரு நாளெனக் கணக்கிடுவார்கள்; ரோமர்கள் நடுராத்தியிலிருந்து மறுநாள் நடுராத்திரிவரை ஒரு நாளெனக் கணக்கிடுவார்கள். யூதர்கள் நேரமுறைப்படி என்றால், அது சனிக்கிழமை இரவு; ரோமமுறைப்படி என்றால் அது ஞாயிற்றுக்கிழமை இரவு.

அது ஞாயிற்றுக்கிழமை இரவாகவே இருந்தாலும், தங்கள் வழக்கத்தின் படியல்ல, மறுநாள் பவுல் புறப்படுகிறார் என்பதால்தான் அன்று கூடினார்கள். அப் 20:7-12. எனவே, இந்தத் தனியொரு சம்பவத்தை வைத்து, ஞாயிறு ஆசரிப்புக்கு ஆதரவு தேடமுடியாது.

ஏழாம்நாள்தான் ஓய்வுநாள் என்பதற்கான நியாயமான காரணங்களை எல்லாம் யோசியுங்கள். ஏழாம்நாள்தான் ஓய்வுநாள் என்பதற்கு வலுவான வேதாகம ஆதாரங்கள் உள்ளன. செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளில் ஆராதனைசெய்வதற்கும், முத்தூதை உலகிற்கு அறிவிக்க அவர்களுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளதற்கும் இது எவ்வாறு உறுதியான நிச்சயமாக இருக்கிறது?

## மிலேத்து

எருசலேமுக்குச் செல்கிற வழியில் பவுல் மீண்டுமாக மிலேத்துவில் தங்குகிறார்; அங்கு எபேசுவின் சபைத்தலைவர்களுக்கு பிரியாவிடை கொடுத்து, உரையாற்றுகிற வாய்ப்பு அவருக்குக் கிடைக்கிறது.

**பவுல் தன் அறிமுக உரை பகுதியில் எதை வலியுறுத்துகிறார்? அப் 20:15–27.**

ரோம், ஸ்பானியா போன்ற தேங்களுக்குச் செல்லவேண்டுமென்று பவுல் திட்டமிட்டிருந்ததால், இனி ஆசியாவுக்கு வர வாய்ப்பே இல்லையென நினைத்தார். ரோமர் 15:22-29. எனவே, எபேசுவில் பொறுப்புடன் தன் நாட்களைக் கழித்ததாகச் சொல்கிறார். அந்த அறிக்கையில், முன்பு எபேசு பட்டணத்தாரின் மத்தியில் தான் வாழ்ந்த விதத்தை குறிப்பிட்டுவிட்டு, இனி எருசலேமில் என்ன நேரிடுமோவெனப் பயப்படுவதாகவும் கூறுகிறார்.

பவுல் பயந்ததற்கு காரணம் இருந்தது. எருசலேம் சபையாருக்கு பவுல் மேல் வெறுப்பில்லாவிட்டாலும், சந்தேகம் இருந்தது; முன்பு, அவர் சபையை உபத்திரவப்படுத்தினதும், விருத்தசேதனம் தேவையில்லை என்று நற்செய்தியை அறிவித்துவந்ததுமே அதற்குக் காரணம். அப் 21:20-26. யூத அதிகாரிகள் அவரை ஒரு தேசத்துரோகி என்றும், தங்கள் மதப்பாரம்பரியங்களுக்கு எதிராகச் செயல்படும் மதத்துரோகி என்றும் நினைத்தார்கள். அப் 23:1,2. முதல் நூற்றாண்டின் மத்தியில், ரோமரின் மோசமான ஆட்சியால், யூதேயாவில் கலகமனப்பான்மையும், தேசியவாத சிந்தனைகளும் அதிகரித்திருந்தன. யூத சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரையும், ஏன் சபையையும்கூட இதன் தாக்கம் பற்றிக்கொண்டது. இந்தப் பின்னணியில்தான், பவுல் புறஜாதியாருக்குமத்தியில் ஊழியம் செய்த பரிசேயன் என்பதால், அவரை மோசமானவராக எண்ணினார்கள். அப் 21:27-36.

இன்னொன்றும் பவுல் கூறவிரும்பினார். பொய்ப்போதகர்களை எபேசுவின் சபைத்தலைவர்கள் சரியாகக் கையாள வேண்டுமென்று பவுல் விரும்பினார். அப் 20:28-31. மந்தையைச் சிதறடித்து, குதறிப்போடும் கொடிதான ஓநாய்கள் என்று பொய்ப்போதகர்களை அவர் சாடுகிறார். சபையின் ஆரம்ப நாட்களிலேயே பொய்போதகர்களால் ஆபத்து உண்டாகியிருந்தது தெரிகிறது. முன்பு சாலோமோன் சொல்லியிருப்பது முற்றிலும் உண்மை: 'சூரியனுக்குகீழ் எதுவும்புதியதில்லை.' பிர 1:9. (எளியமொழிபெயர்ப்பு). பொய்ப்போதகர்களால் சபையில் நம்பமுடியாத அளவுக்குப் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதை வரலாற்றில் காணலாம். முடிவுகாலம்வரையிலும் இந்தப் பிரச்சனை இருக்கும். 2தீமோ 4:3.

பல விஷயங்களை பவுல் சிந்தித்துக் கொண்டிருந்தார்; பல கவலைகளும் அவருக்கிருந்தன; ஆனால், உண்மையோடும் கருத்தோடும் இருப்பதிலிருந்து மட்டும் அவர் தடுமாறவே இல்லை.

நமக்கு உபத்திரவங்கள் வரும் போது, 2கொரி **4:8–14**இல் பவுல் சொல்லும் வார்த்தைகளை நம்முடைய வாழ்க்கையில் எவ்வாறு நாம் அப்பியாசிக்க வேண்டும்? பவுல் யார்மேல் முற்றிலுமாக நம்பிக்கை வைத்திருந்தார்?

## வியாழன், செப்டம்பர் 6

## தீரு மற்றும் செசரியா

மிலேத்துவிலிருந்து புறப்பட்டபிறகு பவுலின் பயண விபரங்களை சற்று விபரமாக லூக்கா கூறுகிறார். எருசலேமுக்குச் செல்கிற வழியில், பெனிகேயாவின் கடற்கரையோரமுள்ள தீருபட்டணத்தில் ஒரு வாரம் தங்குகிறார்கள்; ஏனென்றால், கப்பலின் சரக்குகளை அங்கு இறக்கவேண்டியிருந்தது. அப் 21:1-6. அங்கே பவுலிடம் எருசலேம் போகவேண்டாமென்று விசுவாசிகள் கேட்டுக்கொண்டார்கள். ஆவியின் ஏவுதலினால்தான் அவ்வாறு சொன்னார்கள்; அப்படியானால் பவுல் ஏற்கனவே தேவனுடைய வழிகாட்டலைப் பெற்றது பொய்யா? அப் 19:21இல் அவர் 'ஆவியில் நிர்ணயம் (தீர்மானம்)' பண்ணினதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது; அவரே அந்தத் தீர்மானத்திற்கு வந்தாரெனச் சொல்ல முடியாது. எனவே, பவுலுக்கு நேரிடவிருந்த ஆபத்துகளை தீருவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆவியானவர் காட்டியிருக்கலாம்; அவர்களும் மனித இயல்பின்படி, பவுலை அங்குச் செல்லவேண்டாமென எச்சரித்திருக்கலாம். எருசலேமில் தனக்கு என்ன வேண்டுமானாலும் நேரிடலாமென பவுலும்கூட அறிந்திருந்தார். அப் 20:22,23. பவுலாக இருந்தாலும் சரி, தேவன் தம்முடைய வழிநடத்துதலை முற்றிலுமாக எப்போதும் எல்லாருக்கும் வெளிப்படுத்துவதில்லை.

**பவுல் எருசலேமுக்குச் செல்வது சம்பந்தமாக செசரியாவில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க ஒரு சம்பவம் என்ன? அப் 21:10-14.**

அகபு எருசலேமைச் சேர்ந்த ஒரு தீர்க்கதரிசி. ஏற்கனவே ஒருமுறை உலகமெங்கிலும் வரவிருந்த பஞ்சம்பற்றி தீர்க்கதரிசனம் சொன்னவர். அப் 11:27-30. சில பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை போல, நடக்கவிருந்ததை நடித்துக்காட்டி அறிவிக்கிறார். ஏசா 20:1-6; எரே 13:1-10. எருசலேமில் பவுலுக்கு என்னவாகும், அவருடைய எதிரிகள் எவ்வாறு அவரை ரோமர்களிடம் ஒப்புக்கொடுப்பார்கள் என்பதை அது தெளிவாக எடுத்துக்காட்டியது.

அகபு சொன்னதை தீர்க்கதரிசனமாகப் பார்க்காமல், ஓர் எச்சரிப்பாகப் பார்த்த பவுலின் கூட்டாளிகள், அவரை எருசலேமுக்குச் செல்லவேண்டாமென்று தங்களால் முடிந்தமட்டும் முயல்கிறார்கள். அது பவுலின் மனதைத் தொட்டது; ஆனால், உயிரே போனாலும் தன் ஊழியப்பணியை முடிப்பதில் உறுதியாக இருந்தார். தன்னுடைய பாதுகாப்பையும் நலன்களையும்விட நற்செய்தியின் பரிசுத்தத்தையும் சபையின் ஒற்றுமையையும் பெரிதாக நினைத்தார்.

''இவ்வளவு கனத்த இருதயத்தோடு அந்த அப்போஸ்தலன் ஒருபோதும் எருசலேமுக்குச் சென்றதில்லை. அங்குத் தனக்கு வரவேற்பு குறைவாகவும், எதிர்ப்பு பயங்கரமாகவும் இருக்கமென அறிந்தார். தேவகுமாரனைப் புறக்கணித்து, கொலைசெய்த நகரத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்; தேவ கோபத்தின் நியாயத்தீர்ப்புகள் அந்நகரத்திற்கு காத்திருந்தன.'' - *EGW, AA, p 397,398.*

அவர் மேல் தப்பெண்ணம் கொண்டார்கள், அவதூறு சொன்னார்கள்; மோசமாக நடத்தினார்கள்; அடிக்கடி நிந்தித்தார்கள்; ஆனாலும் பவுல் தன் விசுவாசத்தில் அசையவில்லை. அதைரியமான சூழ்நிலைகளில் நாமும் பவுலைப்போல செயல்பட என்ன செய்யலாம்?

## வெள்ளி, செப்டம்பர் 7

## மேலும் படிக்க:

'நற்செய்தி பிரசங்கிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கிடைத்த வெற்றி யூதர்களை மீண்டும் கோபமடையச் செய்தது. சடங்காச்சார பிரமாணங்களைக் கடைப்பிடிப்பதிலிருந்து யூதர்களுக்கு விடுதலை கிடைத்ததென்றும், யூதருக்குள்ள அதே சிலாக்கியங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாக புறஜாதியாருக்கும் அருளப்பட்டிருக்கிறதென்றும் புதிய உபதேசம் அறிவிக்கப்படுவதாக எல்லா இடங்களிலுமிருந்து செய்திகள் வந்துகொண்டே இருந்தன. 'கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை' என்று பவுல் ஆணித்தரமாகக் கூறியதை அவருடைய எதிரிகள் தேவதூஷணமாகக் கருதினார்கள். கொலோ 3:11. ஒரேயடியாக அவரைப் பேசவிடாமல் செய்ய எண்ணினார்கள்.' - *EGW, AA, p 390.*

'தன் சக விசுவாச சகோதரர் காட்டிய ஆதரவையும் அனுதாபத்தையும்கூட அவரால் நம்பமுடியவில்லை. அவர் செல்கிற இடங்களுக்கெல்லாம் சென்ற மன மாறாத யூதர்கள் அவரையும் அவரது ஊழியத்தையும்பற்றி மோசமான அறிக்கைகளை நேரடியாகவும் நிருபங்கள்மூலமாகவும் எருசலேமுக்குத் தெரியப்படுத்தினார்கள்; அப்போஸ்தலர்களிலும் மூப்பர்களிலும் சிலர்கூட அந்த அறிக்கைகளை உண்மையென நம்பினார்கள்; அவற்றை நிராகரிக்க முயலவில்லை; பவுல் சொல்வது சரிதானென்று தெரிவிக்க விரும்பவில்லை.' - *EGW, AA, p* 398.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *எபேசுவில் பவுல் சந்தித்த பன்னிரு சீஷர்களும் யோவான் ஸ்நானனின் சீடர்களாக இருந்து, பின்னர் இயேசுவின் சீடர்களாக மாறினவர்கள். அப் 19:1-7. ஏற்கனவே முழுக்கு ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும், வேறு சபையிலிருந்து அட்வென்டிஸ்ட் விசுவாசத்தை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு மீண்டும் ஞானஸ்நானம் கொடுப்பதில் தவறில்லை என்பதை இச்சம்பவத்தை வைத்து எவ்வாறு சொல்லலாம்? அப்பொல்லோ மறுஞானஸ்நானம் பெறவில்லை; அதை எவ்வாறு கருதுவது?*

2. *இயேசுவை விசுவாசியாத சகநாட்டவர்கள் பவுலைப் புறக்கணித்தார்கள். இயேசுவை விசுவாசித்த யூதர்களும்கூட பவுலை சந்தேகத்தோடு பார்த்தார்கள், நம்பவில்லை; ஏனென்றால் அவர் 'எல்லைக்குறிகளை' மாற்றுவதாக நினைத்தார்கள். எதிர்ப்புகளுக்குமத்தியிலும் பவுல் விசுவாசத்தை விடவில்லை. இதில் நமக்குள்ள பாடம்?*

3. *ஞாயிற்றுக்கிழமைக்கு ஓய்வுநாள் மாற்றப்பட்டது; அல்லது வழக்கற்றுப் போனது. இவ்வாறு சிலர் வாதிடுகிறார்கள்; அதுபற்றி யோசியுங்கள். மற்ற ஒன்பது கற்பனைகளுக்கும் கீழ்ப்படிவதுபோலவே ஓய்வுநாள் கற்பனையைக் கைக்கொள்வதும் கிரியைத்துவம் அல்ல என்பதை எவ்வாறு அவர்களுக்கு எடுத்துக்காட்டலாம்? அதாவது, நம் இரட்சிப்பிற்கான ஒரே நம்பிக்கை யாரென்று அறிந்து, கற்பனைகளைக் கைக்கொள்வது கிரியைத்துவமல்ல என்பதை எவ்வாறு காட்டலாம்?*